## (ஒ) தனிப்பட்டோர் முதலீட்டங்களின் அளவை

மகாவங்கி, தனிப்பட்டோர் முதலீடுகள் சம்பந்தமாக இலங்கைத்தீவு முழுவதற்குமான ஓர் அளவையை, இவ்வாண்டின் மார்கழி மாதத்தின் போது ஆரம்பித்தது. இலங்கையிலுள்ள தனியார் வெளிநாட்டு முதலீட்டங்களும், தனியார் உள்நாட்டு முதலீட்டங்களும் பற்றிய தகவல்கள், இவ்வளவையின்போது சேகரிக்கப்படும்.

தனிப்பட்டோர் முதலீடுகள் சம்பந்தமாக ஏற்கத்தகும் புள்ளி விபரங்கள் கிடைக்காமல் இருப்பது, தேசிய வருமான மதிப்பீடுகளை நன்கு தயாரிப்பதற்கும், பொருளாதார அபிவிருத்திக்குத் திட்டமிடுவதற்கும், பொருளாதார ஆராய்ச்சிப் படிப்பிற்கும் ஓர் பாரதூரமான இடையூருக உள்ளது. இவ்வித புள்ளி விபரங்களின் அடிப்படையில், துறைகளின்படியான முதலீட்டத்தின் அமைப்பும், அதன் காலக்கிரம இயக்கங்களும், பிரதேசங்களின்படியான பங்கீடும் பற்றிய, திட்டங்களிடுவதற்கு அத்தியாவசியமான அறிவைப், பெற்றுக் கொள்ள முடியும். இறக்குமதிப் பதிலீட்டுத் துறையில் ஏற்படுகின்ற முன்னேற்றங்களின் காரணமாக, முதலீடுகள் பற்றிய ஏற்கத்தக்க புள்ளி விபரங்களின் அவசியம், முன்பிருந்ததைவிடத் தற்போது அதிகரித்துள்ளது.

கூட்டு நிலையங்கள், கூட்டு நிலையங்களல்லாத கைத்தொழிற் தாபனங்கள், கூட்டுநிலையங்களல்லாத பெருந்தோட்டங்கள், கூட்டுநிலையங்களல்லாத சேவை, நிதித் தாபனங்கள், கிராமக் குடியிருப்புகள், மீனவர் குடும்பங்கள், நகர குடியிருப்புகள் ஆகியவற்றிலும் குடியிருப்புக் கட்டட ஆக்கங்களிலும் செய்யப்பட்ட புதிய முதலீடுகளைப் பற்றிய தரவுகள், இவ் அளவையில் சேகரிக்கப்படும். இவ்வளவையில், விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், சேவைகள் போன்ற பொருளாதாரத்தின் சகல துறைகளும் உட்படுத்தப்படும். கூட்டு நிலையங்களினுல் செய்யப்பட்ட முதலீடுகள் பற்றிய புள்ளி விபரக்கணக்கெடுப்பும் நடாத்தப்படும். ஏனைய தாபனங்களால் செய்யப்பட்ட முதலீடுகளின் மதிப்பீடு, அத்தாபனங்களின் மாதிரி அளவையினுற் பெறப்படும்.

முதலீடுகள் பற்றிக் கேட்கப்பட்டுள்ள தகவல்கள், 1963ம் ஆண்டு சித்திரை மாதம் 1ம் திகதியிலிருந்து, 1964ம் ஆண்டு பங்குனி மாதம் 31ம் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கானதாகும்.

கூட்டுநிலையங்களுக்கும் பலதரப்பட்ட தாபனங்களுக்குமான விணுப்பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டன. அவசியம் நேரிடின், இவ்விணுப்பத்திரங்களுக்குத் தொடர்ந்து பயிற்சி பெற்ற விசாரணை உத்தியோகத்தர்கள் வழிக்காட்டவும் மற்றும் வகையிலும் உதவுவர். இக்கூட்டு நிலையங்களும் ஏனைய தாபனங்களும், இவ்விணுப்பத்திரங்களுக்குப் பதில் அளிக்கும் கடமையை அவ்வத்தாபனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் பற்றி அறிந்திருக்கும் பொறுப்பு வாய்ந்த கணக்காளர்களிடம் ஒப்புவிக்க வேண்டுமென, கோரப்பட்டன. (இது, முதலீடுகளில் எந்தவொரு விடயமும் எத்துணைச் சிறியதாயிருப்பினும் அளவையில் இடம் பெறுமல் போய் விடுவதைத் தடுப்பதற்காகவே ஆகும்).

சிறிய விவசாய உடமைகளிலும், குடிசைக் கைத்தொழில்களிலும், மீன்பிடித்தலிலும் உள்ள முதலீடுகளும், வேறுவிதமான கிராம முதலீடுகளிம், கிராம வீட்டுத் துறையில் எண்ணப் போக்கின்படி தெரிவு செய்யப்பட்ட சில வீடுகளை மாதிரிகளாகக் கொண்டு நேர்முக உரையாடல் மூலம், பெறப்படும். பயிற்சி பெற்ற மகா வங்கி விசாரணை உத்தியோகத்தர்கள், மீனவர்களது குடியிருப்புகளின் அளவையை 1964ம் ஆண்டு மார்கழி மாதத்தின்போது செய்து முடித்தார்கள். கிராம குடியிருப்புகள் சம்பந்தமான அளவை, இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.